**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. STC.71/2024 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw- 5 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திரு. நம்பிராஜன் ( காவல் ஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2025

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்பொழுது வெம்பக்கோட்டை காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது காவல் சரகத்தில் வெம்பக்கோட்டை, ஏழாயிரம்பண்ணை, ஆலங்குளம் ஆகிய காவல் நிலையங்கள் அடங்கும். கடந்த 30.07.2023 ம் தேதி ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்திலுள்ள கங்கரக்கோட்டை பகுதியில் சட்டவிரோதமாக வெடிகள் தயாரிப்பதை தடுக்கும் ரோந்து பணியில் இருந்தபோது அதே பகுதியில் செயல்பட்டு வந்த DRO உரிமம் பெற்ற செல்வி பயர் ஆபீஸில் பேன்சி ரக வெடிகள் தயாரிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின்அடிப்படையில் நானும், என்னுடன் ரோந்து பணியில் வந்த தலைமை காவலர் முத்துக்குமார், மாரிமுத்து, முதல் நிலைக்காவலர் பாலமுருகன், பழனிச்செல்வம் ஆகியோர்களிடம் செல்வி பயர் ஆபீஸ்க்கு உள்ளே சென்று தணிக்கை செய்ததில் அங்கு DRO உரிமம் பெற்று சட்ட

விரோதமாக பேன்சி ரக வெடிகள் தயாரித்து வருவதை பார்வையிட்டு 24 எண்ணம் கொண்ட ஸ்டார் குயின் என்று எழுதப்பட்ட முழுமையடைந்த பேன்சி ரக வெடிகள் அடிங்கிய அட்டைப்பெட்டி –4, 22 எண்ணம் கொண்ட ஸ்டார் குயின் என்று எழுதப்பட்ட முழுமையடைந்த பேன்சி ரக வெடிகள் அடங்கிய அட்டைப்பெட்டி– 1, 24 எண்ணம் கொண்ட மிட்நைட் சன்பிளாஸ்ட் என்று எழுதப்பட்ட முழுமையடைந்த பேன்சி ரக வெடிகள் அடங்கிய அட்டைப்பெட்டிகள்–2, வெடிகள் தயாரிக்கப்பயன்படுத்திய குழாய்கள்–5, பேன்சிரக வெடிகள் தயாரிக்கப்பயன்படுத்தப்படும் பிரஸர் கட்டை–1, கட்டிங் செய்யப்பட்ட மிசின் திரி கட்டுகள்–2 ஆகிய பொருட்களை கைப்பற்றி, மேற்படி பயர் ஆபிசில் இருந்த மேலாளர் ஜெகன்குமார் என்பவரை கைது செய்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு அத்தாட்சி தயார் செய்து 14.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி ஜெகன்குமார் மற்றும் தலைமறைவு எதிரி சுந்தரமூர்த்தி ஆகியோர்களின் பெயரில் நிலைய குற்ற எண்.108/2023 பிரிவு–9(B) 1(a) IE Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** மேற்படி வழக்கின் கோப்புகளை எடுத்துக்கொண்டு 15.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சாட்சிகள் சுரேஷ்குமார் மற்றும் சீனி ஆகியோர்களின் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். **பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் நிலையம் வந்து என்னுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த காவலர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம்–91 மூலம் 03.08.2023 ம் தேதி கனம் நீதித்துறை நடுவர்எண்.1 நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **படிவம் –91 ஆனது அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இந்த வழக்கின் முதல் எதிரியான சுந்தரமூர்த்தி என்பவர் 04.08.2023 ம் தேதி கனம் மாவட்ட முதன்மை நீதிமன்றம், திருவில்லிபுத்தூரில் முன்பிணை பெற்றுள்ளார். 15.09.2023 அன்று இந்த வழக்கினை பதிவு செய்தபோது என்னுடன் ரோந்து பணியில் இருந்த காவலர்களிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்து இந்த குற்ற வழக்கு பிரிவினை 9(B) 1(a) of IE Act ல் இருந்து 9 (B) 1(b) of IE Act ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன்.சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.சா.ஆ. 8 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது விசாரணையை முடித்து சட்டப்பிரிவு 9 (B) 1(b) of IE Act ன் கீழ் எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கையை கனம் நீதித்துறை நடுவர்எண்.1 நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவரும், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தவரும், புகார்தாரரும் நான்தான் என்றால் சரிதான். போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் படி ஒரு வழக்கில் புகார்தாரராக இருக்கும் நபர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரிதான். அவ்வாறு இவ்வழக்கில் புகார்தாரராக இருக்கும் நான் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக மாவட்ட ஆட்சியரிடமோ அல்லது காவல் கண்காணிப்பாளரிடமோ அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

2) கங்கரக்கோட்டை வருவாய் கிராமத்தில் செல்வி பயர் ஆபீஸ் ஆனது எந்த கிராமத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளராக நான் எத்தனை வருடம் அனுபவம் பெற்றுள்ளேன் என்றால் 1 ½ வருடமாக அனுபவம் பெற்றுள்ளேன். இந்த 1 ½ வருட பணிகாலத்தில் IE Rules –2008, Rule 128 ன் படி ஆறு மாதத்திற்கு ஒரு முறை பட்டாசு ஆலைகளின் கிடங்குகளை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. நான் பார்வையிட்ட செல்வி பயர் ஆபீஸ் ஆனது DRO உரிமம் பெற்றது என்றால் சரிதான்.

3) அத்தாட்சியில் நான் கைப்பற்றிய வெடிகளை தவிர உள்ள பொருட்களானது உரிமம் பெற்ற ஒரு ஆலையில் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவது என்றால் சரிதான். அத்தாட்சியில் யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். அத்தாட்சியை நான் எழுதவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக காவல் நிலையத்தில் புகைப்படம் எடுக்கும் கேமரா உள்ளதென்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம்–91 ன் இணைந்த புகைப்படமானது யாரால் எடுக்கப்பட்டதென்றால் என்னால் எடுக்கப்பட்டது.

4) எங்கு வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டதென்றால் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்டது. புகைப்படமானது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகைப்படத்தில் வாகனங்கள் காணப்பட்டுள்ள நிலையில் செட்

எண்.13 எங்குள்ளதென்றால் புகைப்படமானது செட் எண்.13 க்கு அருகில் வைத்து எடுக்கப்பட்டது. பொதுவாக பட்டாசு ஆலைக்குள் வாகனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்றால் சரியல்ல.

5) பொதுவாக பட்டாசுகள் வெடி, ஒலி, மற்றும் புகை என மூன்று வகைப்படும் என்றால் சரிதான். நான் கைப்பற்றி பட்டாசுகளை திறந்தும் பார்க்கவில்லை, வெடித்தும் பார்க்கவில்லை என்றால் வெடித்து மட்டும் பார்க்கவில்லை. வெடிகளை வெடித்து பார்த்தால் தான் அது எந்த வகையை சாரும் என்று சொல்லமுடியும் என்றால் பார்த்தாலே சொல்லமுடியும். நான் Explosive ல் நிபுணர் என்றால் சரியல்ல. அதனால் பார்த்தாலே என்னால் வகைப்படுத்தமுடியாது என்றால் சரியல்ல. என்னால் வெடிகளை பார்த்தாலே வகைப்படுத்தமுடியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) நான் கைப்பற்றிய வெடிகளை சிவகாசியில் உள்ள வெடிப்பொருள் கட்டுப்பட்டு இணை அலுவலர் அவர்களுக்கோ, அல்லது நாக்பூரில் உள்ள தலைமை வெடிப்பொருள் அலுவலகத்திற்கோ அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி கூறப்பட்ட இரண்டு அலுவலர்கள் தான் அந்த வெடி எந்த வகையை சாரும் என்று சட்டப்படி வகைப்படுத்துபவர்கள் என்றால் சரிதான். செல்வி பயர் அபீஸ்க்கு உரிமம் வழங்கிய மாவட்ட வருவாய் அலுவலரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரை விசாரித்தால் தான் செல்வி பயர் அபீசில் அனுமதிக்கப்பட்ட வெடிகள் என்ன என்னவென்று தெரியவரும் என்றால் சரியல்ல, உரிமத்தினை பார்த்தாலே தெரியும்.

7) இந்த வழக்கில் மேற்படி கூறிய உரிமத்தை நான் பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த உரிமத்தை தாக்கல் செய்தால் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பேன்சி வெடி என்பதைக் குறித்து IE Act மற்றும் Explosive rules ஐ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கைப்பற்றிய வெடிகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் போது Explosive Act– பிரிவு –5 உரிமம் வழங்கிய அலுவலர் கூறிய விதிகளுக்கு முரணாக உள்ளதென்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

8) செல்வி பயர் ஆபீஸ் ஆனது உரிமம் பெற்ற ஆலை என்றும், சட்ட விதிகளுக்கு உட்பட்டுதான் வெடிகள் தயாரிக்கப்பட்டதென்றால் சரியல்ல. நான் புள்ளவிவரக்கணக்கிற்காக நானே புகார்தாரராகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்பவராகவும், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம், அத்தாட்சி இவ்வழக்கின் சான்று பொருள் ஆகியவை வழக்கிற்காக பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.